**FORM-3**
**MINUTES OF THE COUNCIL MEETINGS**
**(See rule 5 and Serial Number 3 of Appendix - I)**
**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 ஆகஸ்ட் திங்கள் 29.08.2013–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி தினசரிச்சந்தை வளாகத்திலுள்ள கடைகள், தரைப்பாக கடைகள் நுழைவு கட்டணம் தினசரி வாடகை வசூலிப்பது தொடர்பாக 2012–13 முதல் வாடகை திருத்தம் செய்து நகராட்சி மூலம் வசூல் செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.191, நாள் 30.03.2012–ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனமான தாசன் ஆப்செட், மெயின்ரோடு என்பவருக்கு ரசீதுகள் அச்சடிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதன்படி 01.04.2012 முதல் 31.03.2013 வரை கடைகள் நுழைவு கட்டண ரசீதுகள் அச்சிட்டதற்கு, தாசன் ஆப்செட் நிறுவனம், மெயின்ரோடு, குளச்சல் என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.20,938/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/11062/2012)

**தீர்மானம் எண்.685 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

குளச்சல் நகராட்சியில் வினியோகம் செய்யப்படும் குடிநீரினை அடிக்கடி சோதனை செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலகத்திற்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்திற்கும் அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால், இந்நகராட்சியில் வினியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சோதனைக்கூடம், நாகர்கோவில் மூலம் ஆய்வு மேற்கொள்ளுவதற்கு 2013–14 ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2945/2009)

**தீர்மானம் எண்.686 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி காமராஜ் பேருந்து நிலைய பராமரிப்பு பணிகள் மற்றும் விளம்பரம் தொடர்பான பணிகளுக்கு தனது தீர்மானம் எண். 592, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 06.08.2013 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.இராதாகிருஷ்ணன்<br>R.K.Advertisement, Nagercoil. | மதிப்பீட்டை விட 20% கூடுதல்<br>(ரூ. 30,000/– ) |
| 2. | திரு.C.ராஜு,<br>தமிழ் மீடியா, நாகர்கோவில். | மதிப்பீட்டை விட 24% கூடுதல்<br>(ரூ. 31,000/– ) |
| 3 | திரு.S.கண்ணன்,<br>குமரி மீடியா, தக்கலை. | மதிப்பீட்டை விட 408% கூடுதல்<br>(ரூ. 1,27,000/– ) |

மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 408% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.கண்ணன், குமரி மீடியா, தக்கலை நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/1403/2013)

**தீர்மானம் எண்.687 மறு ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட தீர்மானிக்கப்பட்டது. தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி குப்பை கொட்டுமிடத்தில் குப்பைகள் நிறைந்துள்ளதால் தொடர்ந்து குப்பைகளை கொட்ட இயலாத நிலை ஏற்பட்டது. மேலும் குப்பைகள் அதிக அளவில் நிறைந்துள்ளதால், அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியதோடு, தொற்று நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்ததால், பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி இடத்தில் குப்பைகளை மாற்றுவதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4,75,000/– க்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/S.RPS Earth Movers<br>(Prop.R.S.Prabu)<br>Kaliankadu, Chunkankadai - P.O. | மதிப்பீட்டை விட 3.66% கூடுதல்<br>**(ரூ. 4,86,625/–)** |
| 2. | M/s. CVR Earth Movers<br>(Prop.T. Chandrasekar )<br>Monday Market, Neyyoor - P.O. | மதிப்பீட்டு விகிதம்<br>**(ரூ. 4,69,450/–)** |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.CVR Earth Movers, Monday Market நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், பணி செய்து முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2073/2013)

**<u>தீர்மானம் எண்.688 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட 20 ஆழ்துளை கிணறுகளிலிருந்து வெளியேறும் குடிநீரின் அளவு மற்றும் 10 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து வினியோகிக்கப்படும் குடிநீரின் அளவையும், தினந்தோறும் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில், ஆழ்துளை கிணற்றிலிருந்து வெளியேறும் குடிநீரின் அளவு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து வெளியேறும் குடிநீரின் அளவையும் துல்லியமாக தீர்மானிப்பதற்கு அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் Fiber level Indicator gauge பொருத்துவதற்கும் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வினியோகப்படுத்தப்படும் பகிர்மானக் குழாயில் அளவுமானி பொருத்துவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2209/2013)

**<u>தீர்மானம் எண்.689 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 2013–14–ம் ஆண்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கும் போது சேதப்படுத்தப்படும் சாலைகள் மற்றும் வடிகால் ஓடை அடைப்புகளை சரி செய்வதற்கும், குடிநீர் வினியோக பணிகளுக்காக பயன்படுத்தப்படும் வால்வுகளை சுற்றி அமைக்கப்பட்டுள்ள வால்வு பிட்டுகளில் ( Valve pits ) ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் வருடாந்திர பராமரிப்பு மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.இ1/2828/2013)

**தீர்மானம் எண்.690 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பகுதியில் நிலவி வரும் மின்பற்றாக்குறை காரணமாக நகர் முழுவதும் சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட ஜெனரேட்டர்களுக்கான வாடகை மற்றும் டீசல் செலவு தொகைகளுக்கு 01.01.2013 வரை தீர்மானம் எண்.487, நாள் 31.01.2013–ன் மூலம் இந்நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பின் பயன்படுத்தப்பட்ட ஜெனரேட்டர்களுக்கான வாடகை மற்றும் டீசல் செலவு தொகைகள் குறித்த விவரம் பின்வருமாறு

**ஜெனரேட்டர் வாடகை விவரம்:**

| வ.எண். | ஜெனரேட்டர் விவரம் | நாட்கள் குறித்த விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 02.01.2013 முதல் 11.01.2013 9 நாட்கள் | 6,300/– |
| 2 | 62 KVA - 3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) 82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 02.01.2013 முதல் 11.01.2013 10 நாட்கள் | 1,00,000/– |
| 3 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 12.01.2013 முதல் 21.01.2013 6 நாட்கள் | 4,200/– |
| 4 | 82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) 62 KVA - 3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 12.01.2013 முதல் 21.01.2013 10 நாட்கள் | 1,00,000/– |
| 5 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 22.01.2013 முதல் 31.01.2013 9 நாட்கள் | 6,300/– |
| 6 | 82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) 62 KVA - 3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 22.01.2013 முதல் 31.01.2013 10 நாட்கள் | 1,00,000/– |
| 7 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 01.02.2013 முதல் 02.03.2013 28 நாட்கள் | 19,600/– |
| 8 | 82 KVA - 2 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) 62 KVA - 3 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 01.02.2013 முதல் 02.03.2013 30 நாட்கள் | 3,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 9 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 03.03.2013 முதல்<br>12.03.2013 வரை<br>8 நாட்கள் | 5,600/– |
| 10 | 82 KVA - 2 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>62 KVA - 3 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 03.03.2013 முதல்<br>12.03.2013 வரை<br>10 நாட்கள் | 1,00,000/– |
| 11 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 13.03.2013 முதல்<br>22.03.2013 வரை<br>9 நாட்கள். | 6,300/– |
| 12 | 82 KVA - 2 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>62 KVA - 3 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 13.03.2013 முதல்<br>22.03.2013 வரை<br>10 நாட்கள். | 1,00,000/– |
| 13 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 23.03.2013 முதல்<br>11.04.2013 வரை<br>16 நாட்கள். | 11,200/– |
| 14 | 82 KVA - 2 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>62 KVA - 3 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 23.03.2013 முதல்<br>11.04.2013 வரை<br>20 நாட்கள். | 2,00,000/– |
| 15 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 12.04.2013 முதல்<br>21.04.2013 வரை<br>9 நாட்கள். | 6,300/– |
| 16 | 82 KVA - 2 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>62 KVA - 3 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 12.04.2013 முதல்<br>21.04.2013 வரை<br>10 நாட்கள். | 1,00,000/– |
| 17 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 22.04.2013 முதல்<br>01.05.2013 வரை<br>8 நாட்கள். | 5,600/– |
| 18 | 82 KVA - 1 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>62 KVA - 2 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 22.04.2013 முதல்<br>24.04.2013 வரை<br>3 நாட்கள். | 18,000/– |
| 19 | 82 KVA - 1 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–)<br>62 KVA - 1 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 22.04.2013 முதல்<br>01.05.2013 வரை<br>10 நாட்கள். | 40,000/– |
| 20 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 02.05.2013 முதல்<br>21.05.2013 வரை<br>17 நாட்கள். | 11,900/– |
| 21 | 82 KVA - 1 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 02.05.2013 முதல்<br>05.05.2013 வரை<br>4 நாட்கள். | 8,000/– |
| 22 | 62 KVA - 1 எண்ணம்<br>(நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 02.05.2013 முதல்<br>21.05.2013 வரை<br>20 நாட்கள். | 40,000/– |

| | | | |
|---|---|---|---|
| 23 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 22.05.2013 முதல் 10.06.2013 வரை 17 நாட்கள். | 11,900/– |
| 24 | 62 KVA - 1 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 22.05.2013 முதல் 10.06.2013 வரை 20 நாட்கள். | 40,000/– |
| 25 | 7.50 KVA (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.700/–) | 11.06.2013 முதல் 20.06.2013 வரை 9 நாட்கள். | 6,300/– |
| 26 | 62 KVA - 1 எண்ணம் (நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.2000/–) | 11.06.2013 முதல் 20.06.2013 வரை 10 நாட்கள். | 20,000/– |
| | **மொத்தம்** | | **13,67,500/–** |

**டீசல் பில் குறித்த விவரம் பின்வருமாறு :**

| நாட்கள் விவரம் | தொகை ரூ. |
|---|---|
| 01.01.2013 முதல் 14.01.2013 வரை | 1,27,256/– |
| 16.01.2013 முதல் 29.01.2013 வரை | 1,13,053/– |
| 01.02.2013 முதல் 15.02.2013 வரை | 1,44,060/– |
| 16.02.2013 முதல் 28.02.2013 வரை | 1,45,600/– |
| 01.03.2013 முதல் 15.03.2013 வரை | 75,400/– |
| 17.03.2013 முதல் 31.03.2013 வரை | 2,47,594/– |
| 01.04.2013 முதல் 14.04.2013 வரை | 1,44,437/– |
| 16.04.2013 முதல் 30.04.2013 வரை | 1,60,491/– |
| 01.05.2013 முதல் 10.05.2013 வரை | 1,38,075/– |
| 17.05.2013 முதல் 10.06.2013 வரை | 1,18,672/– |
| **மொத்தம்** | **14,14,638/–** |

எனவே குடிநீர் அவசர அவசியம் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு வாடகை ஜெனரேட்டர்களை பயன்படுத்தி, 20.06.2013 வரை குடிநீர் வழங்கியதற்கும், இந்நகராட்சி ஆணையர் (பொ) அவர்களின் அனுமதி பெற்று பிரிவு 15–ன்கீழ் மேற்படி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவுத் தொகை ரூ.27,82,138/– இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. சூமற்படி விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/4030/2012)

**தீர்மானம் எண்.691 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 ஆகஸ்ட் திங்கள் 29.08.2013–ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் 2013–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15–ம் நாள் சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. அது சம்மந்தமாக செலவுகள் செய்த வகைக்கு ரூ. 3,665/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2824/2013)

**தீர்மானம் எண்.692 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியின் 2010–11–ம் ஆண்டு கணக்கு முடித்து கொடுக்கப்பட்டமைக்கும், கன்சல்ட்டன்ட் திரு.வி.சீனிவாசன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு தணிக்கைத் துறையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே 2010–2011–ம் ஆண்டுக்கான கணக்குகளை முடித்து கொடுத்த வகைக்கு திரு.வி.சீனிவாசன், கல்சல்ட்டன்ட்–க்கு ஊதியமாக ரூ.20,000/– வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** இந்நகராட்சியில் கணக்கர் பணியிடம் இல்லாததால் ஆண்டு கணக்குகளை முடிப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே கன்சல்ட்டன்ட் மூலம் 2010–11–ம் ஆண்டு கணக்கு முடித்த வகைக்கு ரூ.20,000/– திரு.வி.சீனிவாசன் என்பவருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.பி1/2585/2007)

**தீர்மானம் எண்.693 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13808/13/பி1 நாள் 08.08.2013–ன்படி, இந்நகராட்சிக்கு திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல் 2013–14 மாநில நிதிக்குழு பரிந்துரைகள் 2013–14 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி ஒதுக்கீட்டின் கீழ் Universal Design Toilet கட்டுவதற்கு ரூ.15.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் காணிக்கை மாதா ஐஸ் பிளான்ட் எதிர்புறம் மற்றும் வார்டு எண்.14–ல் துறைமுகத்தெரு பொழிமுகம் அருகில் அமைந்துள்ள பொது கழிப்பிடங்கள் மிகவும் மோசமாக, பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து மாற்றிவிட்டு மேற்படி இடங்களில் Universal Design Toilet கட்டுவதற்கு ரூ.20,00,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.15,00,000/– போக மீதித் தொகை ரூ.5,00,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2669/2013)

**தீர்மானம் எண்.694 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–திட்டத்தின்கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக மின்கலத்தில் இயங்கும் CCT-Cargo Tipper வாகனம் 2 எண்ணங்கள் ரூ.10.65 லட்சம் மதிப்பீட்டில் வினியோகம் செய்வதற்கு 04.06.2012 –ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றில் மதிப்பீட்டை விட 15.85% குறைவாக (ரூ.8,96,000/– ) ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.CARREAL CARS PRIVATE LTD., CHENNAI நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று இந்நகர்மன்ற தீர்மானம் எண்.297, நாள் 19.07.2012–ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 06.08.2012–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனம் உரிய காலத்திற்குள் வாகனங்களை வினியோகம் செய்யாத காரணத்தால் ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி நிறுவனத்தின் பணி உத்தரவு ரத்து செய்துவிட்டு பணியின் அவசர அவசியம் கருதி அடுத்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.D'Engineerings, Coimbatore நிறுவனத்திற்கு ரூ.8,96,000/– மதிப்பீட்டில் வாகனங்களை வினியோகம் செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.476 நாள் 11.01.2013–ன்படி மன்ற ஒப்புதல் பெற்று 08.02.2013–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனமும் உரிய காலத்திற்குள் ஒப்பந்த நமுனா குறிப்புகளின்படி(Tender Schedule Specifications) வாகனங்களை வினியோகம் செய்யாததால் ஒப்பந்த விதிகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி நிறுவனத்தின் பணி உத்தரவையும் ரத்து செய்துவிட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.578 நாள் 30.05.2013–ன்படி மன்ற ஒப்புதல் பெற்று 16.07.2013–ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்த விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| Krysttal Motors (P) Ltd., Salem. | 0.78% மதிப்பீட்டை விட கூடுதல் (ரூ. **10,73,000/–**) |

மேற்படி நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.78% கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தை குறைத்து தர கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு மேற்படி நிறுவனம் விலை குறைத்து, மதிப்பீட்டை விட 1.38% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணியினை உரிய காலத்திற்கு முடிக்க முடியாமல் உள்ள நிலையினை கருத்தில் கொண்டும், குறுகலான தெருக்களின் குப்பைகளை அகற்றுவதற்கு பயன்படும் வகையில் வாகன வடிவமைப்பு அமைந்துள்ளதாலும், மேற்படி Krysttal Motors (P) Ltd., Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணியினை உரிய காலத்திற்கு முடிக்க முடியாமல் உள்ள நிலையினை கருத்தில் கொண்டும், குறுகலான தெருக்களின் குப்பைகளை அகற்றுவதற்கு பயன்படும் வகையில் வாகன வடிவமைப்பு அமைந்துள்ளதாலும், Krysttal Motors (P)Ltd.,Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.695 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பணி உத்தரவு வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செயல்படுத்துவதற்காக ஒரு வார்டுக்கு 4 எண்ணங்கள் வீதம் 24 வார்டுகளுக்கும் தேவையான 96 எண்ணங்கள் 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சக்கரம் மற்றும் மேல் மூடியுடன் கூடிய HDPE பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் வாங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6,10,000/–க்கும், மேற்படி பணியினை மீதமுள்ள IUDM திட்ட நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/12464/2013)

**தீர்மானம் எண்.696 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு சுற்றுசுவர் கட்டும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.7,80,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 684, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.83% அதிகம். |
| 2. | M/S.கெவின் காம்போனன்ட்ஸ், சென்னை. | மதிப்பீட்டை விட 0.82% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.82% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.கெவின் காம்போனன்ட்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/12524/2013)

**தீர்மானம் எண்.697அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23–ல் சிங்கன்காவு குறுக்குத் தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 660, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.தேவகரிம் சேம், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.48% கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/12135/2013)

**தீர்மானம் எண்.698 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சியில் பு.திாக வாங்கப்பட உள்ள ஜெனரேட்டர்–க்கு பாதுகாப்பு அறை கட்டுதல் மற்றும் கேபிள் பதித்தல் பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 680, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | M/S. என்விரான் இந்தியா, கள்ளியங்காடு, சுங்கான்கடை | மதிப்பீட்டை விட 0.17% குறைவு. |
| 2. | M/S.கெவின் காம்போனன்ட்ஸ், வடபழனி, சென்னை. | மதிப்பீட்டை விட 1.42% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.17%குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. என்விரான் இந்தியா, கள்ளியங்காடு நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2524/2013)

**தீர்மானம் எண்.699 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை அருகில் மெயின்ரோட்டில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி உள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றதால், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.7,20,000/– க்கு இந்நககர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்ல நாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.09% குறைவு. |
| 2. | திரு.A.விஷ்ணுராம்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 1.52% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** பணியின் அவசர அவசியம் மற்றும் பொதுமக்கள் நலன் ஆகியவற்றில் கருத்தில் கொண்டு மதிப்பீட்டு தொகை ரூ.7,20,000/– க்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டைவிட 0.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.செல்லநாடார், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணியை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2549–1/13)

**தீர்மானம் எண்.700 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் புதிதாக வாங்கப்பட்டுள்ள 200 KVA, 50 KVA மற்றும் 30 KVA ஜெனரேட்டர்களுக்கு Change over Switch, Earthling Bits, Main Control Unit Box மற்றும் Distribution Box ஆகியவை பொருத்துதல் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/– க்கு பணியின் அவசர அவசியம் கருதி இந்நககர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | M/S.கெவின் காம்போனன்ட்ஸ்,<br>வடபழனி, சென்னை. | மதிப்பீட்டை விட 1.22% அதிகம் |
| 2. | M/S. என்விரான் இந்தியா,<br>கள்ளியங்காடு, சுங்கான்கடை | மதிப்பீட்டை விட 0.02% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. என்விரான் இந்தியா, கள்ளியங்காடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** பணியின் அவசர அவசியம் கருதி, மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/– க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு., மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. என்விரான் இந்தியா, கள்ளியங்காடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/2549–2/13)

**தீர்மானம் எண்.701 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 –ல் இக்பால் குறுக்கு தெருவில் வடிகால் ஓடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 657, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.சத்தியதாஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு. |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.97% அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.சத்தியதாஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1268/2013)

**தீர்மானம் எண்.702 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8–ல், க.எண். 9/60 அருகில் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை ஆகிய பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 656, நாள் 31.07.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23.08.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 3.16% அதிகம். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/12006/2013)

**தீர்மானம் எண்.703 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி